# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.12.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

1. மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களின் 16.12.2022ம் தேதிய மனுவில் திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண்-1, சங்கரன்கோவில் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான உபயோகமற்ற நிலையில் உள்ள மினி மார்க்கெட் பகுதியில் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதாகவும், அருகிலுள்ள பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்கள் இந்த மினி மார்க்கெட் முன்பாக சேதமடைந்த நிலையில் உள்ள 11 கடைகளும் மற்றும் பின்புறம் மினி மார்க்கெட் கடைகளும் முற்றிலும் சேதமடைந்து இடியும் நிலையில் உள்ளது. மேற்படி மினி மார்க்கெட் சம்பந்தமாக பல புகார்கள் பொதுமக்களிடம் இருந்தும், பல்வேறு கட்சிகளில் இருந்தும் வந்துள்ளது. எனவே உபயோகமற்ற இடியும் நிலையில் உள்ள மினி மார்க்கெட் பகுதியையும் அதற்கு முன்பாக உள்ள கடைகளையும் இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய சுற்றுச் சுவர் அமைக்கவும் மற்றும் பழைய இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு : பொருளில் கண்ட விவரப்படி தச்சநல்லூர் சங்கரன்கோவில் சாலையில் இடியும் நிலையில் உள்ள மினி மார்க்கெட் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு சுற்றுச்சுவர் அமைக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். இ2/3763/20222

**தீர்மானம் எண்: 208 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 15, இராமையன்பட்டி ரோடு கரீஸ்மா தைக்கா தெரு பகுதியில் புதியதாக தெருவிளக்கு அமைக்க அப்பகுதி மக்கள் மாண்புமிகு மேயா் அவா்களின் மக்கள் குறைதீா்க்கும் மனு நாளில் மனு அளித்துள்ளனா். அதன்படி ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 11 எண்ணம்

40 வாட்ஸ் தெருவிளக்குளை ஒப்பந்த நிறுவனமான மெசர்ஸ்.ஆகாஷ் அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் விநியோகித்து பொருத்துவதற்கு தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் செலவுக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 15, இராமையன்பட்டி ரோடு கரீஸ்மா தைக்கா தெரு பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 11 எண்ணம் 40 வாட்ஸ் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்துக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1-2724-2022)

**தீர்மானம் எண்: 209 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகம், 2022-2025-ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்படும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம இனங்களுக்கு 14.12.2022 அன்று பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட நயினார்குளம் கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் திரு. R.குமார் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். திரு. R.குமார் என்பவர் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 171000/- குறிப்பிட்டுள்ளார். திரு. R.குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையானது குறுமத் தொகை ரூ 136000/-ஐ விட ரூ. 35000/- கூடுதலாக உள்ளதாலும் மாநகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டும் திரு.R.குமார் என்பவரின் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ 1,71,000/-யினை ஏற்று அரசாணை எண் : 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009-ன் படி மேற்படி உரிம இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 14.12.2022 அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட நயினார்குளம் கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது

ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் ஒரு நபர் மட்டும் கலந்து கொண்டார். ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியாக இருந்தபொழுதிலும் திரு. R.குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 171000/- குறுமத் தொகையைவிட ரூ. 35000/- கூடுதலாக உள்ளதாலும் மாநகராட்சி வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட உரிமத்தினை அரசாணை எண் : 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு திரு.R.குமார் என்பவருக்கு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : அ1/ 3655/2021**
**தீர்மானம் எண்: 210 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் உரிம இனத்திற்காக திரு.கிருஷ்ணமூர்த்தி குத்தகைதாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| **வ.எண்** | **பணி விபரம்** | **தொகை** | **வைப்புத்தொகை பதிவேடு பதிவு விபரம்** |
|---|---|---|---|
| 1 | சாலையோரம் காய்கறி விற்பனை செய்பவர் மற்றும் இறைச்சி கடை உரிமையாளர்களிடம் சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (2018-21) (வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.40000/- மட்டும்) | 40,000/- | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்: 30 வரிசை எண் 289, 290 |
| | மொத்தம் | 40,000/- | |

மேற்கண்டவாறு செலுத்திய வைப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகையினை அன்னார் திரும்ப வழங்க கோரியுள்ளார், மேற்காணும் வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால் நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன் படி காலம்கடந்த வைப்புத் தொகை ரூ.40000/-ஐ திரு.கிருஷ்ணமூர்த்தி குத்தகைதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட சாலையோரம் காய்கறி விற்பனை செய்பவர் மற்றும் இறைச்சி கடை உரிமையாளர்களிடம் சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு காலம் கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால் நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன் படி காலம்கடந்த வைப்புத் தொகை ரூ.40000/-ஐ

திரு. கிருஷ்ணமூர்த்தி குத்தகைதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் மே.பா. அ1/4149/2017**

**தீர்மானம் எண்: 211 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 16, அமீர்சாகிப் நகர் பகுதியில் புதியதாக தெருவிளக்கு அமைக்க அப்பகுதி மக்கள் கோரியுள்ளார்கள். அதன்படி ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 23 எண்ணம் 20 வாட்ஸ் தெருவிளக்குகளும், புதிய மின்கம்பம் அமைத்து 2 எண்ணம் 40 வாட்ஸ் LED விளக்குகளும் ஆக மொத்தம் 25 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்குகள் மெசர்ஸ்.ஆகாஷ் அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் ஒப்பந்த விலையில் விநியோகித்து அமைக்கவும், தெருவிளக்குகள் பொருத்துவதற்கு மதிப்பீட்டு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.4.00,000 இலட்சம் செலவுக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 16, அமீர்சாகிப் நகர் மக்களின் கோரிக்கையை ஏற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 23 எண்ணம் 20 வாட்ஸ் தெருவிளக்குகளும், புதிய மின்கம்பம் அமைத்து 2 எண்ணம் 40 வாட்ஸ் LED விளக்குகளும் ஆக மொத்தம் 25 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்குகள் மெசர்ஸ்.ஆகாஷ் அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் ஒப்பந்த விலையில் அமைக்கவும் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு மதிப்பீட்டு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.4.00,000/-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1-953-2022)

**தீர்மானம் எண்: 212 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**6. திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, முதல் நிலை சேகரமாக குப்பைகளை கையாளுவதற்கு போதுமான வாகனங்கள் மற்றும் ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், வாடகை அடிப்படையில் TATA ACE வாகனங்களை அமர்த்திக் கொள்வதற்கு கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-**

| S. No | Description of Vehicle | No. of Vehicles | Period | TATA ACE Day Rent | Driver salary | Diesel charges | Total Amount per day | Total Amount 17 days for 12 vehicles | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TATA ACE | 12 | 6.11.2022 To 22.11.2022 (17 days) | | | | | | |
| | 1.PR Promoters & Transport | | | 1500 | 600 | 600 | 2700 | 550800 | 649944 |
| | | | | | | | GST 18% | 99144 | |
| | 2.Petchimuthu Transport | | | 1600 | 600 | 700 | 2900 | 591600 | 698088 |
| | | | | | | | GST 18% | 106488 | |
| | 3.Jayram Ventures | | | 1500 | 500 | 500 | 2500 | 510000 | 601800 |
| | | | | | | | GST 18% | 91800 | |

மேற்கண்ட அட்டவணையின்படி வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் Jayram Ventures விலைப்புள்ளி மற்ற இரண்டை விட TATA ACE வாகனத்திற்கான வாகன வாடகை, ஓட்டுநர் ஊதியம் மற்றும் டீசல் உள்பட நாள் ஒன்றுக்கு ரூ.2500/- என குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி TATA ACE வாகனங்களை, அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக வாடகை அடிப்படையில் ரூ.34,92,800/- மதிப்பீட்டில் TATA ACE 12 எண்ணம் வாகனங்களை 06.11.2022 முதல் 22.11.2022 வரை (ரூ.6,01,800/-) மற்றும் 14 எண்ணம் வாகனங்களை 23.11.2022 முதல் 31.1.2023 வரையும் (ரூ.28,91,000/-) பயன்படுத்திக் கொள்வதற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, முதல் நிலை சேகரமாக குப்பைகளை கையாளுவதற்கு போதுமான வாகனங்கள் மற்றும் ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், வாடகை அடிப்படையில் TATA ACE 12 வாகனங்களை 06.11.2022 முதல் 22.11.2022 முடியவும் மற்றும் 14 வாகனங்களை

23.11.2022 முதல் 31.1.2023 முடிய உள்ள காலத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.34,92,800/-க்கும், அவசர அவசியம் கருதி வேலை ஆணை வழங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/7798/2022)

**தீர்மானம் எண்: 213 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

7. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் 32-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.S.அனுராதா சங்கரபாண்டியன் அவர்களின் கோரிக்கையின்படி புதுப்பேட்டை தெரு அம்மன் கோவில் முன்பு, காரியநாயனார் தெரு, இலந்தக்குளம் ஆகிய மூன்று தெருக்கள் சந்திக்கும் இடத்தில் சிறிய உயர் கோபுர மின் விளக்கு 12 மீட்டர் உயரத்தில் 90W-LED 5 எண்ணம் மற்றும் மின் மீட்டர், On/Off டைமர் பாக்ஸ் உள்பட ஒரு சிறிய உயர்கோபுரம் அமைத்திட செலவினம் ரூ.4.00 லட்சம் வீதம் மூன்று சிறிய உயர் கோபுரம் அமைத்திட 4,00,000/- X 3 = 12,00,000/- (Rupees Twelve Lakhs)-க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி மூன்று தெருக்கள் சந்திக்கும் இடத்தில் மூன்று சிறிய உயர்கோபுரம் அமைத்து தெரு விளக்கு அமைக்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 32-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் மூன்று சிறிய உயர்கோபுரம் அமைத்து தெரு விளக்கு அமைத்திட அதற்கான மதிப்பீட்டு செலவினம் Rs.12,00,000/- (Rupees Twelve Lakhs)-க்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ2/2034/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 214 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---